## வீதிச் செயற்திட்டத்தைத் தயார்படுத்தலுக்கான வசதி- - 2012

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகள் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 256,039,009 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,853,389,108 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| செலவினத்தின் வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம். |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| **உபகரணங்கள்** | | | |
| பொதி - II (ஆலோசனை) | (1,680,028)* | - | 3,702,898 |
| **நடைபெறும் வேலைகள்:- (செயற்திட்ட செலவினம்)** | | | |
| பொதி - II (ஆலோசனை) | 4,372,793 | 11,888,776 | 115,340,736 |
| கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்கள் | (132,547)** | - | 6,684,329 |
| மீளளிக்கப்படாத கேள்வி வைப்பகள் | - | - | (4,591,646) |
| **ஆலோசனை** | | | |
| பொதி - I | - | 685,495 | 399,531,991 |
| பொதி - II | - | 343,043 | 410,811,723 |
| பொதி 1 | 258,100 | 5,236,781 | 169,454,270 |
| பொதி V | 3,020,654 | 85,930,855 | 236,525,310 |
| மேலதிக நிதியளிப்பிற்கான வீதிப் பொதிகள் | 185,113,251 | - | 185,113,251 |
| தனிப்பட்ட ஆலோசனையாளர் | - | - | 4,045,039 |
| வெள்ளச் சேத மதிப்பீடு | - | 5,106,023 | 5,106,023 |
| ஆலோசனை சேவைகள் - யாழ்ப்பாணம் | 4,533,449 | 38,652,673 | 91,768,958 |
| ஆலோசனை சேவைகள் - 400 கிமீ | 53,880,514 | 93,560,894 | 177,097,420 |
| கொள்வனவு ஆலோசனை | - | 349,837 | 14,947,328 |
| தயார்படுத்தல் வேலை – வடக்கு வீதி இணைப்புச் | - | - | 902,065 |

| | | | |
|---|---|---|---|
| செயற்திட்டம் | | | |
| தயார்படுத்தல் வேலை – கலவரத்தால் பாதிக்கப்பட்ட பிரதேச அவசரச் செயற்திட்டம் | - | (733,787) | 854,701 |
| வட்டிக் கட்டணங்கள் | 6,672,823 | 10,956,052 | 36,094,712 |
| | 256,039,009 | 251,976,642 | 1,853,389,108 |

* உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிற்கு மாற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வின் காரணமாக.

** கட்டுநிதியின் மீள்மதிப்பீட்டிலுள்ள சீராக்கல் காரணமாக

## 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவற்றின் மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | கட்டுநிதி கணக்கு இல 5930 | |
|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா |
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 9,996 | 1,138,600 |
| கூட்டு:- மீள்நிரப்பல்கள் | இல்லை | இல்லை |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 132,547 |
| | 9,996 | 1,271,147 |
| கழி: பற்றுதல்கள் | இல்லை | இல்லை |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 9,996 | 1,271,147 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிபந்தனைகள் குறிப்புரை (ரீஆர்ஓ) மேலதிக தேசிய வீதிகள் மற்றும் மாகாண வீதிகளின் தயார்படுத்தல் வேலைகளிற்கான 1 ஆம் இலக்க ஒப்பந்த முரண் என்பவற்றின் ஆலோசனையாளருக்கான சேவைகள் நோக்கெல்லையானது சமூக மதிப்பீடுகள் (எஸ்ஏஎஸ்), மீள்குடியேற்றத் திட்டங்கள், சுற்றாடல் மதிப்பாய்வு, விரிவான வடிவமைப்பு மாதிரி மற்றும் கிரய மதிப்பீடுகள் என்பவற்றின் அறிக்கைகள் தயாரித்தலுடன் இணைந்தருந்தது. அந்த அறிக்கைகள் முன்னைய ஆலோசகரால் தயாரிக்கப்பட்டு அத்தகைய அறிக்கைகளை மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்குவதற்கு ரீஆர்ஓ வழங்கியிருந்த போதிலும் அந்த அறிக்கைகள் ஆலோசனையாளரால் மீளாய்வு செய்யப்பட்டனவா என்பதற்கு நியாயப்படுத்தக்கூடிய சான்றுகள் காணப்படவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.6 ஆம் பிரிவின்படி, திரட்டு நிதியதிலிருந்து மானியங்கள்பெறுகின்ற நியதிச் சட்டசபைகள் பெறுமதி சேர் வரி மற்றும் மேந்தலைகள் என்பவற்றிற்கு உடபட்டிருக்காத போதிலும் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட சேவைகள் மீது மேந்தலைகள் மற்றும் பெறுமதி சேர் வரிகளாக செயற்திட்டத்திலிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ரூபா 72,395 தொகை அறவிடப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டத்தின் ஒரு உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்ட சம்பளங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அடிப்படையிலான சூத்திரத்தை பிரயோகிப்பதற்குப் பதிலாக வீதி அபிவிருத்தி சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட சூத்திரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, பிரயோகிக்கக்கூடிய சம்பள மட்டங்களுடன் ஒப்பிடும் போது செயற்திட்டத்தால் மேலதிகமாக ரூபா 20,926 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சேவைக்குள் உள்வாங்கப்பட்ட செயற்திட்டத்தில் வேலைசெய்கின்ற ஒரு உத்தியோகத்தர் பணிக்கொடைக் கொடுப்பனவிற்கு தகுதியற்றிருந்த போதிலும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுகள் அதிகாரச்சட்டத்தின் II ஆம் பிரிவிலுள்ள அறிவுறுத்தல்களை மீறி பணிக்கொடைக் கொடுப்பனவாக உத்தியோகத்தருக்கு ரூபா 12,060 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதிகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2012 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2012 ஆம் ஆண்டில் பயன்படுத்தப் பட்ட நிதிகள் | 2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப் பட்ட நிதிகள் | சதவீதமாக ஆண்டிற்கான பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ்.டொலர் மில். | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | % |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 15 | 1,476.75 | 250.0 | 210.21 | 1,478.81 | 84 |
| இலங்கை அரசாங்கம் | 05 | 492.25 | 33.5 | 33.5 | 360.49 | 100 |
| மொத்தம் | 20 | 1,969.00 | 283.5 | 243.71* | 1,839.3** | |

* எதிர்மறையான தொழிற்படு மூலதனம் ரூபா 12,255,113 மற்றும் செயற்திட்ட பணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 69,243 பெறுமதியான சீன மானிய உதவிச் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் என்பன காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து இத் தொகை வித்தியாசப்படுகின்றது.

** ரூபா 12,255,113 தொகையான எதிர்மறையான தொழிற்படு மூலதனம் மற்றும் ரூபா 1,177,592 தொகையான மானியம் என்பவற்றின் காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து இத் தொகை வித்தியாசப்படுகின்றது.

### 2.2 நிதி மற்நும் பௌதீக செயலாற்றல்

மாகாண வீதி முகவர்களின் பங்குபற்றலுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு என்பன நவீன மற்றும் வினைத்திறனான வீதி வலையமைப்பிற்கான தேவைகளை நிறைவேற்றுவதற்காக புனரமைப’ புச் செய்து மேம்படுத்த வேண்டிய வீதிகளை இனங்கண்டிருந்தன.

2,200 கிலோமீற்றர் மொத்த நீளமான தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் 2,900 கிமீ மொத்த நீளமான மாகாண வீதிகள் சாத்தியவள ஆய்வுகள் மற்றும் விரிவான வடிவமைப்பு என்பவற்றிற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 3,141 கிமீ நீளமான தேசிய வீதிகள் மற்றும் 3,119 கிமீ நீளமான மாகாண வீதிகள் என்பவற்றின் ஆலோசனை சேவைகளிற்காக ரூபா 1,387 மில்லியன் பெறுமதியில் ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையின்படி, 4,940 கிமீ தொடர்பான சாத்தியவள ஆயவு மற்றும் விரிவான வடிவமைப்பு என்பன 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒப்பந்தத்தின் முன்னேற்றம் மற்றும் திரட்டிய செலவினம் என்பவற்றின் விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| பொதி | ஒப்பந்தப்படி வீதியின் நீளம் | பூர்த்தியாக்கிய வீதியின் உள்ளபடியான நீளம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | கிமீ | கிமீ | ரூபா மில் |
| பொதி I | 1,500 | 27-எவ்எஸ்<br>157-டிடி | 268.7 |
| பொதி II | 2,400 | 2,400 | 410.8 |
| பொதி I பீ | 351 | 347 | 130.8 |
| பொதி I சீ | 664 | 664 | 169.4 |
| பொதி V & Vஏ | 436 | 436 | 158.3 |
| பொதி VB | 77 | 77 | 78.2 |
| பொதி X -என்எச் | 113 | 113 | 185.1 |
| பொதி X - மாகாண வீதிகள் | 69 | 69 | |
| யாழ்ப்பாணம் | 250 | 250 | 91.8 |
| கிளிநொச்சி / முல்லைத்தீவு | 400 | 400 | 177 |
| | 6,260 | 4,940 | 1,670.1 |